ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1883/17 - 2014 ඔක්තෝබර් මස 11 වැනි සෙනසුරාදා - 2014.10.11
*1883/17 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி சனிக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைக்கான விதிக் கோட்பாடு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1991.05.17ம் திகதிய 662/11 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட சுகாதார சேவையின் வைத்தியர்கள் தொடர்பான விதிக் கோட்பாடு அதில் காலத்திற்கு காலம் செய்யப்பட்ட திருத்தங்கள் மூலம் எடுக்கப்பட்ட அல்லது அதன் மூலம் எடுக்கக்கூடியதென ஆலோசிக்கப்பட்ட அல்லது ஏதாவது கட்டமொன்றில் பாதிப்புகள் ஏற்படா வண்ணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைக்கான விதிக் கோட்பாடு வழிகாட்டலாக எடுக்கப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி.

ரி.எம்.எல்.சி. சேனாரத்ன,
செயலாளர்,
அரச சேவை ஆணைக்குழு.

2014.ஒக்டோபர் 10.

**இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைக்கான விதிக் கோட்பாடு**

**1. நடைமுறைப்படுத்தப்படும் திகதி**

இந்த மருத்துவ சேவை விதிக் கோட்பாடு 2013.11.01ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

**2. நியமன அதிகாரி.**

சுகாதார சேவைப்பணிப்பாளர் நாயகத்தை நியமிக்கும் நியமன அதிகாரி அமைச்சரவை என்பதுடன், ஏனைய அனைத்து பதவிகளுக்குமான நியமனங்கள் வழங்கும் நியமன அதிகாரி அரச சேவை ஆணைக்குழுவாகும்.

**3. பிரிவு/சேவைப்பிரிவு**

**3.1.சேவைப்பிரிவு** SL-03-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு
SL-01-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு
SL-02-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு

**3.2. தரம்.**

SL-03-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு
பிரதிப்பணிப்பாளர் நாயக தரம்
விஷேட மருத்துவ உத்தியோகத்தர் தரம்

SL-01-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு
சிரேஷ்ட மருத்துவ நிர்வாக உத்தியோகத்தர் தரம்
பிரதி மருத்துவ நிர்வாக உத்தியோகத்தர் தரம்

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

SL-02-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு

**மருத்துவ உத்தியோகத்தர்கள்**

- ஆரம்ப தரம்
- II ஆம் தரம்
- I ஆம் தரம்

**பல் மருத்துவ உத்தியோகத்தர்கள்**

- II ஆம் தரம்
- I ஆம் தரம்

**4. மருத்துவ சேவை பொது வரையறை**

பரந்த சேவை ஒன்றான இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைக்குரிய இந்த விதிக் கோட்பாடு மூலம் நிர்வகிக்கப்படும் உத்தியோகத்தர்கள் சுகாதார அமைச்சின் கீழுள்ள பொது நிர்வாகம் (சுகாதார அமைச்சு, பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு), நோயாளர் பராமரிப்பு சேவை (சிகிச்சை வழங்கும் சேவை), பொது சுகாதார சேவை (நிவாரண சேவை) போன்ற சேவைகளுக்கு கட்டுப்பட்டுள்ளதுடன், இந்த உத்தியோகத்தர்கள் நோயாளர்களின் நோய் பராமரிப்பு சேவையை திட்டமிடல், சுகாதார சேவை தயாரித்தல் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. மக்களது உடல்,உள மற்றும் சமூக நலம் பேணுதல் என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் தேவையான சந்தர்ப்பங்களில் விஷேட சேவைகளுடன் சுகாதார பாதுகாப்புச் சிகிச்சை (நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை) நிவாரணம், மேம்பாடு மற்றும் புனருத்தாபனம் போன்றவற்றில் அனைத்து தரப்பினரும் இந்த சேவையின் மூலம் உள்வாங்கப்படுகின்றனர். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக கல்வி, பயிற்சி, ஆய்வுகள் மற்றும் சுகாதார சேவை தொடர்பான கண்காணிப்பு உட்பட மேற்குறிப்பிட்ட அனைத்தும் சுகாதாரப் பிரிவின் அனைத்து பொது நிர்வாக நடவடிக்கைகளுக்கும் அவர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

**5. சம்பளம்**

| சேவைப்பிரிவு | சம்பள குறியீட்டு இலக்கம் | சம்பள அளவு | தரம் | ஆரம்ப சம்பள அளவு | ஆரம்ப சம்பள நிலை(ரூ) |
|---|---|---|---|---|---|
| SL-03-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு | SL-03 | 42,390-12x1,310 – 58,110/- | பிரதிப்பணிப்பாளர் நாயகத் தரம் | 01 | 42,390.00 |
| | | | விஷேட மருத்துவ உத்தியோகத்தர் தரம்/ விஷேட பல் மருத்துவ உத்தியோகத்தர் தரம் | 01 | 42,390.00 |
| SL-01-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு | SL-01 | 22,935-10 x645-8 x 790-17 x1050-53,555/- | சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரம் | 20 | 36,755.00 |
| | | | பிரதி மருத்துவ நிர்வாக தரம் | 12 | 30,175.00 |
| SL-02-2006 சம்பள குறியீட்டுக்குரிய சேவைப்பிரிவு | SL-02 | 25,515-4 x645-8 x 650-16 x1050-50,095/- | மருத்துவ உத்தியோகத்தர் ஆரம்ப தரம் | 02 | 26,160.00 |
| | | | மருத்துவ உத்தியோகத்தர் IIம் தரம் | 05 | 28,095.00 |
| | | | மருத்துவ உத்தியோகத்தர் Iம் தரம் | 14 | 34,345.00 |
| | | | பல் மருத்துவ உத்தியோகத்தர்IIம் தரம் | 1 | 25,515.00 |
| | | | பல் மருத்துவ உத்தியோகத்தர்களின் Iம் தரம் | 14 | 34,345.00 |

**06. சேவைப் பிரிவுக்குரிய பதவி/ பதவிகள்**

**6.1 அங்கீகரிக்கப்பட்ட தரம், பதவிப்பெயர் மற்றும் எண்ணிக்கை**

| ***பதவி அங்கீகரிக்கப்பட்ட தரம்*** | ***பதவிப் பெயர்*** | ***அங்கீகரிக்கப் பட்ட பதவி எண்ணிக்கை*** |
|---|---|---|
| பிரதிப்பணிப்பாளர் நாயகத் தரம் | மேலதிக செயலாளர் (மருத்துவ சேவை) | 1 |
| | மேலதிக செயலாளர் (பொது சுகாதார சேவை) | 1 |
| | சுகாதார சேவைப்பணிப்பாளர் நாயகம் | 1 |
| | பிரதி பணிப்பாளர் நாயகங்கள் | 8 |
| | பிரதி பணிப்பாளர் நாயகங்கள்/பணிப்பாளர்இ.தேசிய.வைத்தியசாலை | 1 |
| சிரேஷ்ட மருத்துவ நிர்வாக உத்தியோகத்தர் தரம் | சிரேஷ்ட உதவிச் செயலாளர்(மருத்துவ சேவை) | 112 |
| | பணிப்பாளர்கள்(அமைச்சு/வைத்தியசாலை/வேலைத்திட்டம்) | |
| | மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர்கள் | |
| | பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர்கள் | |
| | பிரதிப் பணிப்பாளர்கள்/இலங்கை தேசியவைத்தியசாலை | |
| | மாகாண சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர்கள் | |
| பிரதி மருத்துவ நிர்வாக தரம் | பிரதிப்பணிப்பாளர்கள்(அமைச்சு,வைத்தியசாலை,வே.திட்டம்) | 174 |
| | பிரதி பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர்கள் | |
| | வைத்திய அத்தியட்சகர்கள்<br>பிரதி வைத்திய அத்தியட்சகர்கள் | |
| விஷேட மருத்துவ உத்தியோகத்தர் தரம் | விஷேட மருத்துவ உத்தியோகத்தர் | 1699 |
| | விஷேட பல் மருத்துவ உத்தியோகத்தர் | 88 |
| மருத்துவ உத்தியோகத்தர் Iம் தரம் | மருத்துவ உத்தியோகத்தர (அமைச்சு,வைத்தியசாலை,வே.திட்டம்) | 15052 |
| மருத்துவ உத்தியோகத்தர் IIம் தரம் | | |
| மருத்துவ உத்தியோகத்தர் ஆரம்ப தரம் | | |
| பல் மருத்துவ உத்தியோகத்தர் Iம் தரம் | பல் மருத்துவ உத்தியோகத்தர (அமைச்சு,வைத்தியசாலை,வே.திட்டம்) | 1371 |
| பல் மருத்துவ உத்தியோகத்தர் IIம் தரம் | | |

**6.2 பதவித்தன்மை**

நிலையானதும் ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும்.

**07. ஆட்சேர்ப்பு முறை**

**7.1 ஆட்சேர்ப்பு சதவீதம்**

100% திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் இணைத்துக் கொள்ளப்படுவர்.

**7.2 திறந்த ஆட்சேர்ப்பு**

அ. மருத்துவ உத்தியோகத்தர்கள்
ஆ. பல் மருத்துவ உத்தியோகத்தர்கள்.

**7.2 அ. திறந்த ஆட்சேர்ப்பு -மருத்துவ உத்தியோகத்தர்கள்**

**7.2 அ -1.ஆட்சேர்ப்பிற்கான தரம் -** ஆரம்ப தரம்

**7.2 அ -2.ஆட்சேர்ப்பிற்கான கல்வி மற்றும் தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம்.**

இலங்கை வைத்திய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் மருத்துவ பீடத்தில் மருத்துவ பட்டம் பெற்று இலங்கை வைத்திய சபையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வைத்தியசாலை ஒன்றில் ஒருவருட கட்டாய உள்ளக பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்த பின் வைத்தியராக சேவை செய்வதற்காக இலங்கை வைத்திய சபையில் முன் அனுமதி பெற்ற வைத்தியர்கள் ஆட்சேர்ப்பிற்கான தகைமைகளைப் பெற்றவர்களாவர்.

**குறிப்பு – 1.**

1988 நவம்பர் 01ம் திகதிக்குப் பிறகு மருத்துவ பட்டம் பெற்ற இலங்கைப் பிரஜைகளுக்கு மருத்துவ சட்ட விதியில் 29.1 (b)(II) (cc) மற்றும்29.2(b)(III) இன் கீழ் விஷேட பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை வைத்திய சபையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய உள் நாட்டு வைத்தியசாலை ஒன்றில் ஒருவருட கட்டாய உள்ளக பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்திருத்தல்.

**7.2 அ -3.உடற்தகைமை–** நோயாளர் பராமரிப்பு சேவை வழங்குவதற்கு சிறந்த உடற் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**7.2 அ - 4. வயது :** 25 – 45 வயதிற்குட்பட்டிருத்தல் வேண்டும்.

**7.2 அ -5. ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரல் மற்றும் தேர்ந்தெடுக்கும் முறை:**

திணைக்கள சுற்றுநிருபத்தின் மூலம் மற்றும் அரச வர்த்தமானியின் மூலம் மற்றும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்படும் பொது அறிவிப்பு மூலம் மேற்குறிப்பிட்ட தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முதலாவது முன்னுரிமையாக அரச பல்கலைக்கழக பட்டதாரிகள் கருத்திற் கொள்ளப்படுவதுடன், அதன் பிறகு மருத்துவ சட்ட விதியில் 29.1 (b)(II) (cc) மற்றும்29.2(b)(III) இன் கீழ் விஷேட பரீட்சையுடன் தகைமைகளைப் பெற்ற வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிகள் கருத்திற் கொள்ளப்படும். தேர்ந்தெடுக்கப்படுவதானது பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அரச பல்கலைக்கழக பட்டதாரிகளின் திறமை அடிப்படையில் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டதாரிகள் தொடர்பாக இலங்கை வைத்திய சபையினால் வழங்கப்படும் திறமை அடிப்படையில் ஆகும். அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் அவர்கள் மருத்துவ உத்தியோகத்தர்களாக ஆரம்ப தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

**7.2 ஆ. திறந்த ஆட்சேர்ப்பு– பல்மருத்தவ உத்தியோகத்தர்கள்**

**7.2 ஆ - 1.ஆட்சேர்ப்பிற்கான தரம் -** தரம் II

**7.2 ஆ -2.ஆட்சேர்ப்பிற்கான கல்வி மற்றும் தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம்.**

இலங்கை வைத்திய சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் பல் மருத்துவ பீடத்தில் பல் மருத்துவ பட்டம் பெற்ற பல் வைத்தியராக சேவை

செய்வதற்கு இலங்கை வைத்திய சபையினால் முன்கூட்டியே பதிவு செய்த பல் வைத்தியர்கள் ஆட்சேர்ப்பிற்கான தகைமைகளைப் பெற்றவர்களாவர்.

**குறிப்பு –2.**

1988 நவம்பர் 01ஆம் திகதிக்குப் பிறகு வெளிநாட்டு பல் மருத்துவப்பட்டம் பெற்ற இலங்கைப் பிரஜைகளுக்கு மருத்துவ சட்ட விதியில் 29.1 (b)(II) (cc) மற்றும்29.2(b)(III) இன் கீழ் விஷேட பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**7.2.ஆ -3. அனுபவம் :** அவசியமில்லை.

**7.2.ஆ-4. உடற்தகைமை–** நோயாளர் பராமரிப்பு சேவை வழங்குவதற்கு சிறந்த உடற் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**7.2.ஆ -5. வயது :** 25 – 45 வயதிற்குட்பட்டிருத்தல் வேண்டும்.

**7.2.ஆ -6. ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரல் மற்றும் தேர்ந்தெடுக்கும் முறை:**

திணைக்கள சுற்றுநிருபத்தின் மூலம் மற்றும் அரச வர்த்தமானியின் மூலம் மற்றும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்படும் பொது அறிவிப்பு மூலம் மேற்குறிப்பிட்ட தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முதலாவது முன்னுரிமை அரச பல்கலைக்கழக பட்டதாரிகள் கருத்திற் கொள்ளப்படுவதுடன், அதன் பிறகு மருத்துவ சட்ட விதியில் 29.1 (b)(II) (cc) மற்றும்29.2(b)(III) இன் கீழ் விஷேட பரீட்சையுடன் தகைமைகளைப் பெற்ற வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிகள் கருத்திற் கொள்ளப்படும். தேர்ந்தெடுக்கப்படுவதானது பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அரச பல்கலைக்கழக பட்டதாரிகளின் திறமை அடிப்படையில் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டதாரிகள் தொடர்பாக இலங்கை வைத்திய சபையினால் வழங்கப்படும் திறமை அடிப்படையில் ஆகும். அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் அவர்கள் பல் மருத்துவ உத்தியோகத்தர்களாக இரண்டாம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

**குறிப்பு –3.**

**வெளிநாட்டு மருத்துவப்பட்டம்/பல் மருத்துவப்பட்டம் உடனான கல்வித்தகைமை ஏற்றுக் கொள்ளப்படுவதானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் ஆகும்.**

- உரிய பட்டம் முன் கூட்டியே அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காவிடின் அது வெளிநாட்டு பட்ட குழுவிற்கு (foreign degrees committee) சமர்ப்பித்தல் வேண்டும்.
- ஆங்கில மொழியல்லாத வேறு மொழிகளில் அந்த பயிற்சி நெறியை முடித்துள்ள பட்டதாரிகள் நான்கு மாதங்கள் மொழி பயிற்சி பெறும் கற்கை நெறியை பெறல் வேண்டும்.(மருத்துவ பட்டதாரிகளுக்கான அனைத்து விஷேடத் தன்மை தொடர்பாக மாதாந்தம்)

**உள்ளக மருத்தவ உத்தியோகத்தர்கள்**

வெளிநாட்டு பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் உள்ளக நியமன ஆரம்பமானது,இலங்கை மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறியஉள்ளகத்தவர்களின் நியமனத்துடன் ஒன்றாக இடம் பெறல் வேண்டும்.

**08. மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் பல் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் போட்டிப் பரீட்சை முறை**

**8.1 வினைத்திறன் காண் தடைப்பரீட்சை**

| **வினைத்திறன் காண் தடைப் பரீட்சை** | **வினைத்திறன் காண் தடைப் பரீட்சையின் தன்மை** | பாடங்கள் | **விஷேட அவதானத்தை செலுத்துவதற்காக ஆலோசனைகள் வழங்கும் துறை** |
|---|---|---|---|
| வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | அ. எழுத்துப் பரீட்சை | ஆ. எழுத்துப் பரீட்சையின் வினாப் பத்திரம் கீழுள்ளவாறு ஆகும். | |
| | | 1.தாபன விதிக்கோவை- இரண்டு மணித்தியாலங் களுக்கான வினாப் பத்திரம் | சுகாதார அமைச்சின் சுகாதார சேவை திணைக்களத்தின் பொது விதிமுறைகள்<br>அரசசேவை ஆணைக்குழுவின் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகள்<br>தாபன விதிக்கோவை |
| | | 2. கணக்கு - இரண்டு மணித்தியாலங்களுக்கான வினாப் பத்திரம் | சுகாதார திணைக்களத்தின் தொகை முகாமைத்துவம் மற்றும் நிதிப்பிரமானம்<br>சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்படும் முகாமைத்துவ கைநூலில் நிதி தொடர்பான பகுதி. |
| | | 3. வைத்தியசாலை மற்றும் மருந்துசாலை நிர்வாகம் | நாளாந்த நிர்வாக கடமைகளுக்கு உரிய நிதிப்பிரமானம்<br>வைத்தியசாலை மற்றும் பொது சுகாதார நிர்வாகம் |
| | ஆ. வாய் மொழிப்பரீட்சை | ஆ.வாய் மொழிப்பரீட்சை- சிங்கள/ தமிழ் மொழித் தேர்ச்சிக்கானதாகும் | அமைச்சின் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய அத்தியாயம் |

**8.2 வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை தாண்டுவதற்கான காலப்பகுதி**

ஆரம்ப தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் சகல மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான சேவையில் II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கு முன் மற்றும் II ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் அனைத்து பல் மருத்துவ உத்தியோகத்தர்களும் நியமன திகதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**8.3. வினைத்திறன் காண் தடைப் பரீட்சைநடாத்தும் அதிகாரத்திற்குரியவர்.**

அரச சேவை ஆணைக்குழுவினால் நிர்வாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனமொன்று அல்லது பரீட்சைக்குழு ஒன்றினால்.

**குறிப்பு– 4**

**வினைத்திறன் தடைகாண் போட்டிப்பரீட்சைக்கான பொது வழிகாட்டல்**

- பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன் அரச வர்த்தமானியில் பரீட்சையானது அறிவிக்கப்படும்.

- தமது சேவைக்காலத்தினை கருத்திற் கொள்ளாது ஆரம்ப தரத்தில் உள்ள எந்தவொரு உத்தியோகத்தர்களுக்கும் வினைத்திறன் தடைகாண் போட்டிப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

- உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது சந்தர்ப்பத்தில் அனைத்துப் பாடங்களுக்கும் கட்டாயமாகத் தோற்றுதல் வேண்டும். உத்தியோகத்தர்கள் ஒன்று அல்லது சில பாடங்களில் சித்தியடைந்து ஏனைய பாடங்களில் சித்தியடையாவிடின் அவர் பிறகோர் சந்தர்ப்பத்தில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத பாடத்தில்/பாடங்களில் சித்தியடைதல் வேண்டும்.

- இரண்டு வருட காலத்திற்குள் திணைக்களப் பரீட்சையில் சித்தியடையாத மருத்துவ உத்தியோகத்தர்களின்/பல்மருத்துவ உத்தியோகத்தர்களின் சம்பள உயர்வு பிற்போடப்படுவதுடன், அவர் உரிய தரத்திற்கான பதவி உயர்வுப் பரீட்சை சித்தியடைவதற்காக இரண்டு வருடங்களுக்கு மேலதிகமாக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்திற்கு சமமான காலம் தாமதிக்கப்படும்.

- அந்த திணைக்கள பரீட்சையில் சித்தியடையும் வரை II ஆம் தரத்திற்கு பதவி உயர்தல், விஷேட தரத்திற்கு அல்லது நிர்வாகத் தரத்திற்கு நியமனம் பெறுவதற்கான அனுமதி கிடைக்காது.

- முன்னரே திணைக்களப் பரீட்சையில் சித்தியடையாத மருத்துவ உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தரத்தில் அல்லது மருத்துவ நிபுணத்துவ தர பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பின் அவர்கள் நியமன திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் கட்டாயமானதாகும். தமது இரண்டாவது சம்பள உயர்வை பிற்போடுவதற்கு மேலதிகமாக தீர்மானிக்கப்படும் காலத்திற்குள் அவ்வாறு செய்யத் தவறுபவர்களின் பணிமூப்பு பரீட்சை சித்தியடைவதற்காக மேலதிகமாக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்திற்கு சமமான காலம் தாமதிக்கப்படும்.

- தாபன விதிக்கோவை, கணக்கு, வைத்தியசாலைமற்றும் மருந்துசாலை நிர்வாகம் போன்ற பாடங்களைக் கொண்ட எழுத்துப்பரீட்சையுடன் சிங்கள/ தமிழ் மொழித்தேர்ச்சியைப் பரிசீலிப்பதற்கான வாய்மொழிப்பரீட்சையும் ஆகும். வாய்மொழிப்பரீட்சை நடாத்துவதன் நோக்கம் தமது பொதுவான கடமைகளை நிறைவேற்ற சிங்கள/ தமிழ் மொழித்தேர்ச்சி உள்ளதா என்பதைப்பரீசிலிப்பதற்காக ஆகும்.

- இந்தப்பரீட்சை வருடத்திற்கு இருமுறை நடாத்தப்படும்.

**9. அரச மொழித்தேர்ச்சி**

| **மொழித்தேர்ச்சி** | **பெற்றுக் கொள்ள வேண்டிய தேர்ச்சி** |
|---|---|
| அரச மொழி | அரச மொழியொன்றல்லாத வேறு மொழிகளில் சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்களினால் குறிப்பிடப்பட்ட அரச மொழித் தேர்ச்சி சோதனைக் காலத்திற்குள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். க.பொ.த (சா.த) தாய்மொழியில் சித்தியடைந்திருத்தல் இதற்காக போதுமானதாகும். |
| ஏனைய அரச மொழி | அரச நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 07/2007 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம் உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |

**10. தரம் உயர்த்துதல்**

**10.1. மருத்துவ உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு**

**10.1.1 ஆரம்ப தரத்திலிருந்து II வது தரத்திற்கு பதவி உயர்த்தல்**

**பெற்றிருக்க வேண்டிய தகைமைகள்**

I. ஆரம்ப தரத்தில் இரு வருடங்கள் (02) வினைத்திறன் மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
II. வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் குறிப்பிட்ட திகதியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**10.1.2 IIம் தரத்திலிருந்து I வது தரத்திற்கு பதவி உயர்த்தல்**

**10.1.2.1 பட்ட பின் படிப்பு/டிப்ளோமாவைக் கொண்டுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்த்தல்.**

**பெற்றிருக்க வேண்டிய தகைமைகள்**

I. சேவை நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
II. சேவைப்பிரிவில் II ம் தரத்தில் ஆறு வருடங்கள் (06) சேவைக்காலத்தைப்பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பள உயர்வுகள் ஆறு (06) பெற்றுக் கொண்டிருத்தல்.
III. கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்கு திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
IV. சேவை விதிக் கோட்பாட்டில் I மற்றும் II வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பட்ட பின் படிப்பு தகைமைகளை சிறந்ததாக பூர்த்தி செய்திருத்தல்.
V. வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் குறிப்பிட்ட திகதியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
VI. அரச மொழித்தேர்ச்சி குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றிருத்தல் வேண்டும்.

**10.1.2.2பட்ட பின் படிப்பு/டிப்ளோமாவைக் கொண்டிராத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்த்தல்.**

**பெற்றிருக்க வேண்டிய தகைமைகள்**

I. சேவை நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
II. சேவைப்பிரிவில் II ம் தரத்தில் பன்னிரண்டு வருடங்கள் (12) சேவைக்காலத்தைப்பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பள உயர்வுகள் பன்னிரண்டு (12) பெற்றுக் கொண்டிருத்தல்.
III. கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்கு திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
IV. வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் குறிப்பிட்ட திகதியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
V. அரச மொழித்தேர்ச்சி குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றிருத்தல் வேண்டும்.

**10.2 பல் மருத்துவ உத்தியோகத்தர்கள் IIம் தரத்திலிருந்து I வது தரத்திற்கு பதவி உயர்த்தல்**

**10.2.1பட்ட பின் படிப்பு/டிப்ளோமாவைக் கொண்டுள்ள பல் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்த்தல்.**

**பெற்றிருக்க வேண்டிய தகைமைகள்**

I. சேவை நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
II. சேவைப்பிரிவில் II ம் தரத்தில் ஒன்பது வருடங்கள் (09) சேவைக்காலத்தைப்பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பள உயர்வுகள் ஒன்பது (09) பெற்றுக் கொண்டிருத்தல்.
III. கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்கு திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
IV. சேவை விதிக் கோட்பாட்டில் I மற்றும் II வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள்:பட்ட பின் படிப்புதகைமைகளை சிறந்ததாக பூர்த்தி செய்திருத்தல்.
V. வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் குறிப்பிட்ட திகதியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
VI. அரச மொழித்தேர்ச்சி குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றிருத்தல் வேண்டும்.

**10.2.2 பட்ட பின் படிப்பு/டிப்ளோமாவைக் கொண்டிராத பல் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்த்தல்.**

**பெற்றிருக்க வேண்டிய தகைமைகள்**

I. சேவை நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
II. சேவைப்பிரிவில் II ம் தரத்தில் பதினைந்து வருடங்கள் (15) சேவைக்காலத்தைப்பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பள உயர்வுகள் பதினைந்து (15) பெற்றுக் கொண்டிருத்தல்.
III. கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்கு திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
IV. வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் குறிப்பிட்ட திகதியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
V. அரச மொழித்தேர்ச்சி குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றிருத்தல் வேண்டும்.

**10.3 பதவி உயர்த்தும் முறை**

தகைமைகளைப்பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களினால் குறிப்பிட்ட படிவத்தின் மூலம் நியமன அதிகாரியிற்கு கோரப்படும் போது, தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு தகைமைகள் பெற்ற திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உரிய தரத்திற்கு பதவி உயர்த்துதல் நியமன அதிகாரியினால் செய்யப்படும்.

**11. பதவி உயர்வின் மூலம் பதவிகளுக்கு நியமித்தல்.**

**11.1 மருத்துவ நிர்வாக தரத்திற்கான நியமனம்**

**11.1.1 மருத்துவ நிர்வாக தரத்தின் பதவிகளுக்குரிய நியமனங்கள் தொடர்பான பொது வழிகாட்டல்.**

1. அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைகளுக்கமைய மருத்துவ நிர்வாகத் தரத்திற்கு நியமிக்கப்படும்.

2. தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்கக்கூடிய விதத்தில் வருடாந்த இடமாற்றப் பட்டியல் மூலம் இந்த பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படும்.

3. வெற்றிடமான பதவியொன்று தொடர்பாக அறிவிக்கும் போது அந்த அறிவிப்பில் பதவி விபரத்தை உள்ளடக்க வேண்டும்.

4. இந்த சேவைக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாயத் தகைமைகளுக்கு உரியதான சட்டதிட்டம் 2007.04.16 ம் திகதியின் இலக்கம் 1493/3 எனும் வர்த்தமானி அறிவிப்பு நடைமுறைப்படுத்துவதற்கு முன் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பாதிப்பு ஏற்படாதிருத்தல் வேண்டும்.

5. மருத்துவ நிர்வாகத் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தருக்கும் தனியார் மருத்துவ சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

6. III மற்றும் IVம் அத்தியாயத்தின் உபபிரிவுகளில் உள்ள மாகாணங்களுக்குக் கீழ் கொண்டுவரும் புதிய பதவிகள் தொடர்பாக அறிவிப்பு செய்வதற்கு முன் மாகாண அதிகாரம் ஆளுநரின் உடன்பாட்டை பெற்றுக் கொள்ளுதல் அவசியமானது என்பதுடன், அதன் பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சை குழுவிற்கு பதவியின் விடயத்திற்கு உரிய மாகாணத்திலிருந்து இருவர் உள்வாங்கப்படல் வேண்டும்.

7. சுகாதார அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்(மருத்துவ சேவை/பொது சகாதார சேவை), மேலதிக செயலாளர்(நிர்வாகம்), சுகாதார சேவைப்பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள்,அரச நிர்வாக அமைச்சின் இ.நி.சே.சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் உரிய மாகாண அதிகாரிகளினால் பெயர் குறிப்பிடப்படும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட பூர்வ நிலையான குழு உறுப்பினர்கள் அடங்கிய நேர்முகப்பரீட்சைக் குழுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுடன், அனைத்து நேர்முகப்பரீட்சைக் குழு ஒவ்வொன்றுக்குமாக அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறல் வேண்டும்.

8. துணை விதிமுறைகள்

(i) நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றம் என்பவற்றிற்காக இந்த விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், 2007.04.16 ம் திகதியின் இலக்கம் 1493/3 எனும் வர்த்தமானி அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படும் போது சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள்

தாம் அதுவரை வகித்த பதவியைக் கருத்திற் கொள்ளாது தற்போது வகிக்கும் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகப்பதவியில் இணைந்திருத்தல் வேண்டும். மேலும் இந்த சேவைக் கோட்பாட்டின் அத்தியாயங்கள் IV மற்றும் V இல் குறிப்பிடப்பட்டுள்ளசிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்திற்காக தீர்மானிக்கப்பட்ட கட்டாய தகைமைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப்படும் எந்தவொரு அல்லது புதிய பதவிகளுக்காக உள்ள கட்டாய தகைமை 2007.04.16 ம் திகதியின் இலக்கம் 1493/3 எனும் வர்த்தமானி அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படும் போது சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு உரித்தாகாது. அதனால் ஓய்வூதியம் பெறும் வரை நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றம் என்பவற்றிற்கு உரிய எந்த பதவிக்கும் அவர்களுக்கு விண்ணப்பிக்க சுதந்திரமுண்டு.

(ii) இந்த சேவைக் கோட்பாட்டில் III, IV மற்றும் Vஆகிய அத்தியாயங்களில் புதிய பதவிகள் தொடர்பாக எடுத்தவற்றை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதுடன், உரிய விதிமுறையின் அவசியத்தினைப் பூரணப்படுத்தியதன் பின் இடமாற்றம் செயற்படுத்தப்படல் வேண்டும்.

11.1.2. மருத்துவ நிர்வாகத் தரத்திற்கான பதவிகளுக்கு நியமிப்பதற்கு உரிய தகைமைகள் மற்றும் தேர்ந்தெடுக்கும் முறை.

**பதவி/தரம் (அ). கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**

11.1.2.1. பிரதி மருத்துவ நிர்வாக தரம்

(அ) மருத்துவ சேவைக் கோட்பாட்டில் அத்தியாயங்கள் I மற்றும் II இல் பட்டியலிடப்பட்டுள்ள முதுமாணிப்பட்டத் தகைமைகளுடனான உத்தியோகத்தர்கள் IIIவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதி மருத்துவ நிர்வாகப் பதவிகளுக்காக விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராவர்.

(ஆ) திணைக்களத்தில் எட்டு வருடங்கள் தொடர்ச்சியான சேவையுடன் (08 வருட காலம் கணிப்பிடப்படுவது ஆரம்ப தரத்திற்கு உள்வாங்கப்பட்ட திகதியிலிருந்தாகும்.) II வது தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்த மருத்துவ உத்தியோகத்தர் , பல் சத்திர சிகிச்சை வைத்தியர்/ மருத்துவ நிபுணத்துவ உத்தியோகத்தராதல்.

(இ) உத்தியோகத்தர் ஒருவர், பிரதி மருத்துவ நிர்வாக தரத்திலுள்ள உத்தியோகத்தர் தாம் பதிற்கடமை புரியும் சேவைக்காலமானது மேலதிக தகைமையாகக் கருதப்படும். எப்படியிருப்பினும் அதை நியமித்தல் உரிய நியமன அதிகாரியினால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) வயதெல்லையானது அனைத்து உத்தியோகத்தர்களும் தற்பொழுதும் அரச சேவையில் இருப்பதால் உச்ச வயதெல்லை உரித்தாகாது.

**பதவி/தரம் ஆ. தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள்**

I. பிரதி நிர்வாகத்தரத்தில் ஏற்படும் வெற்றிடங்கள் அந்த தரத்தில் உள்ள வெற்றிடங்கள் அந்த தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கிடையில் செய்யப்படுகின்ற வருடாந்த இடமாற்றங்கள் மூலம் நிரப்பப்படும்.

II. வருடாந்த இடமாற்றத்தின் மூலம் பதவியின் வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியாது போகும் சந்தர்ப்பத்தில் அது அறிவிக்கப் படுவதுடன், அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட முறைப்படி நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களில் இருந்து நிரப்பப்படும்.

III. பிரதி மருத்தவ நிர்வாகத்தரத்தின் பதவிகளுக்குத் தேர்ந்தெடுப்பது அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதி அளித்துள்ள புள்ளி முறைகளின் பிரகாரம் நேர்முகப்பரீட்சையின் கீழ் நடைபெறும். புள்ளிகள் வழங்கும் போது I ஆவது தரத்தின் மற்றும் II வது தரத்தின் சேவை மூப்பு அடிப்படையாகக் கருதப்படும்.

**குறிப்பு -5.**வருடாந்த இடமாற்றம் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை நியமன அதிகாரிக்கு, அவசியமான தகைமைகளைக் கொண்ட ஏற்கனவே பிரதி மருத்துவ நிர்வாக சேவையில் உள்ள உத்தியோகத்தர்களில் இருந்து பதிற்கடமை புரிதல் அடிப்படையில் நியமிக்க முடியும்.

**குறிப்பு -6.**பிரதி மருத்துவ நிர்வாக தரத்தின் இடமாற்ற நிபந்தனை நடைமுறைப்படுத்தும் வரை புதிய தரத்திலுள்ளவர்களால் வெற்றிடம் நிரப்பப்படுவதானது 11.1.2.1.ஆ (I) மற்றும் (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அறிவிப்பினூடாக)

| **பதவி/தரம்** | **(அ). கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்** |
|---|---|
| 11.1.2.2.சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரம் | I. மருத்துவ சேவைக் கோட்பாட்டின் அத்தியாயம் I மற்றும் II இல் பட்டியலிடப்பட்டுள்ள MSC/MD (மருத்துவ நிர்வாக) பட்டம் அல்லது MSC/MD (பொது மருத்துவ) பட்டம் பெற்றுள்ள மருத்துவ உத்தியோகத்தரொருவர் அல்லது பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவர் அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளி முறைகளின் பிரகாரம் இடம் பெற்ற நேர்முகப் பரீட்சையினூடு சிரேஷ்ட நிர்வாக தரத்தின் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு உரித்துடையவராவர். |

II. பிரதி மருத்துவ தரத்தில் குறைந்த பட்சம் 03 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப்பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

III. சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்திற்குக் கீழ் கொண்டு வரப்படும் சமனான பதவி IV வது அத்தியாயத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், சேவை அவசியத்திற்கேற்ப காலத்துக்குக்காலம் உருவாக்கப்பட்ட எந்தவொரு பதவியும் அதற்கு உள்வாங்கப்படும்.

**குறிப்பு 7**-சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத்தரத்தின் கீழ் கொண்டுவரும் சமனான பதவிகளுக்கான கட்டாய தகைமைகள் IV ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இதன் பதவி சமனான பதவியாக கருதப்படும்.

IV. இப்பதவிக்கானவிண்ணப்பங்கள் கோரப்படும் போதுவிண்ணப்பதாரிகள் IV வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய முதுமாணிப்பட்டத் தகைமை கட்டாயமாக பெற்றிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், 2007.04.16 ம் திகதியின் இலக்கம் 1493/3 எனும் வர்த்தமானி அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படும் போது சிரேஷ்ட மருத்துவ நிர்வாக பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த கட்டாயத் தகைமை உரித்தாகாது.

V. உத்தியோகத்தரொருவர் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்திற்குரிய பதவியில் பதிற்கடமை புரியும் சேவைக் காலம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். எப்படியிருப்பினும் அதை நியமித்தல் உரிய நியமன அதிகாரியினால் செய்யப்பட்ட நியமனமாக இருத்தல் வேண்டும்.

VI. வயதெல்லையானது அனைத்து உத்தியோகத்தர்களும் தற்பொழுதும் அரச சேவையில் இருப்பதால் உச்ச வயதெல்லை உரித்தாகாது

.

| **பதவி/தரம்** | **(ஆ).தேர்ந்தெடுக்கும் முறை** |
|---|---|
| சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரம் | I. சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத்தரத்தில் ஏற்படும் வெற்றிடங்கள் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத்தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் மூலம் நிரப்பப்படும்.வருடாந்த இடமாற்றத்தின் மூலம் பதவியின் வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியாது போகும் சந்தர்ப்பத்தில் அது அறிவிக்கப் படுவதுடன், சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட முறைப்படி நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும். |

II. வருடாந்த இடமாற்றம் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை நியமன அதிகாரிக்கு, அவசியமான தகைமைகளைக் கொண்ட ஏற்கனவே பிரதி மருத்துவ நிர்வாக சேவையில் அல்லது சிரேஷ்ட மருத்துவ நிர்வாக சேவையில் உள்ள உத்தியோகத்தர்களில் இருந்து பதிற்கடமை புரிதல் அடிப்படையில் நியமிக்க முடியும்.

| பதவி/தரம் | | (அ). கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|
| 11.1.2.3. பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கான தரம் | I. | சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தரொருவர் அல்லது பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவர் அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளி முறைகளின் பிரகாரம் இடம் பெற்ற நேர்முகப் பரீட்சையின் கீழ் V வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காக பிரதிப்பணிப்பாளர் நாயகம் தரத்தின் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு உரித்துடையவராவர். |
| | II. | பிரதிப்பணிப்பாளர் நாயகம் தரத்திற்குக் கீழ் கொண்டு வரப்படும் சமனான பதவி V வது அத்தியாயத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், சேவை அவசியத்திற்கேற்ப காலத்துக்குக்காலம் உருவாக்கப்பட்ட எந்தவொரு பதவியும் அதற்கு உள்வாங்கப்படும். |
| | III. | விண்ணப்பதாரி இங்கு அத்தியாயத்தில் கோரப்பட்டுள்ளதன் பிரகாரம் மருத்துவ சேவை கோட்பாட்டின் I மற்றும் IIஇல் பட்டியலிடப்பட்டுள்ள மருத்துவ நிர்வாகம் தொடர்பாக MSC/MD பட்டம் அல்லது பொது மருத்துவம் தொடர்பான MSC/MD பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**குறிப்பு – 8** மேற் குறிப்பிட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக விஷேட நிலைமையாகக் கருதி V அத்தியாயத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதன் பிரகாரம் மருத்துவ நிர்வாகம் தொடர்பாக MSC/MD பட்டம் அல்லது பொது மருத்துவம் தொடர்பான MSC/MD பட்டம் தகைமையாகக்கருதப்படும்.<br><br>**குறிப்பு – 9** எப்படியிருப்பினும் ஏற்கனவே சிரேஷ்ட மருத்துவ நிர்வாக உத்தியோகத்தர்கள் அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு இந்த கட்டாயத் தகைமை உரித்தல்ல. அவர்களுக்கு தமது தற்போதைய பதவியை வகிக்க முடியும் என்பதுடன், கட்டாய தகைமையை கருத்திற் கொள்ளாது அவர்கள் V ஆம் அத்தியாயத்தின் கீழ் கொண்டுவரும் வேறு எந்த பதவிக்கும் நியமிக்க முடியும். |
| | IV. | வயதெல்லை - அனைத்து உத்தியோகத்தர்களும் தற்பொழுதும் அரச சேவையில் இருப்பதால் உச்ச வயதெல்லை உரித்தாகாது. |
| | V. | பணிப்பாளர் பதவியில் இறுதி நிலையமானதேசிய வைத்தியசாலையில் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தரத்திற்குரியவராக கருதப்படுவர். |
| | VI. | இந்த தரத்திற்கு உரிய பதவி உயர்வு திட்டங்கள் இல்லை. |
| | VII. | இந்த கோட்பாட்டின் 11.1.1. பந்தியின் கீழ் வரும் நியமனங்களுக்குரிய பொது வழிகாட்டிகள் பிற தேவையின் பிரகாரம் உபயோகிக்க முடியும். |
| | VIII. | இடமாற்றங்கள் V ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிப் பணிப்பாளர் நாயக தரத்திற்குக்கீழ் வரும் அனைத்துப்பதவிகளும் இறுதிப்பதவியாகுவதுடன், இடமாற்றங்களுக்குட்படாது. |

| பதவி/தரம் | | (ஆ). தேர்ந்தெடுக்கும் முறை |
|---|---|---|
| பிரதிப்பணிப்பாளர் நாயகத்திற்கான தரம் | I. | வர்த்தமானி அறிவித்தல் மூலம் அல்லது பத்திரிகை அறிவிப்பின் மூலம் அல்லது திணைக்கள சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் வெற்றிடங்கள் அறிவிக்கப்பட்டு தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளி முறைகளின் பிரகாரம் இடம் பெற்ற நேர்முகப் பரீட்சையின் மூலம் இந்த வெற்றிடம் நிரப்பப்படும்.<br><br>**குறிப்பு - 10** இந்த தரத்திற்குரிய பதவியில் இடமாற்றங்கள் இல்லாத காரணத்தினால் வெற்றிடமாகும் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பப்படும் வரை நியமன அதிகாரிக்கு, அவசியமான தகைமைகளைக் கொண்ட ஏற்கனவே சிரேஷ்ட மருத்துவ நிர்வாக சேவையில் அல்லது பிரதிப்பணிப்பாளர் நாயக சேவையில் உள்ள உத்தியோகத்தர்களில் இருந்து பதிற்கடமை புரிதல் அடிப்படையில் நியமிக்க முடியும்.<br><br>**குறிப்பு 11** எவ்வாறாயினும்,பதிற்கடமை புரிதலுக்கான நியமனம் முறையாக நியமன அதிகாரியினால் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அனுமதித்தல் வேண்டும். |

11.2 – **விஷேட மருத்துவ உத்தியோகத்தர் தரத்திற்கான நியமனம்**

11.2.1 **விஷேட மருத்துவ உத்தியோகத்தர் தரத்திற்கான தகைமைகள் மற்றும் தேர்தெடுக்கும் முறை.**

**பதவி/தரம் (அ) கல்வி மற்றும் வேறுதகைமைகள்**

விஷேட மருத்துவ உத்தியோகத்தர் தரம்

